# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# ஏழாம் பத்து

## ஏழாம் திருவாய்மொழி - ஏழையர்
## எம்பெருமானது திவ்ய அவயவ ஸௌந்தர்யம் உருவெளித்தோற்றத்தால் சூழ வந்து காட்சி அளிக்க, அதனால் வருந்தும் தலைவி சொல்லிய பாசுரம்

** ஏழையர் ஆவி உண்ணும் * இணைக்
கூற்றங்கொலோ? அறியேன் *
ஆழி அங்கண்ண பிரான் * திருக் கண்கள்
கொலோ? அறியேன் **
சூழவும் தாமரை நாண்மலர்
போல் * வந்து தோன்றும் கண்டீர் *
தோழியர்காள்! அன்னைமீர்! * என்
செய்கேன்? துயராட்டியேனே 1

ஆட்டியும் தூற்றியும் நின்று * அன்னைமீர்!
என்னை நீர் நலிந்தென்? *
மாட்டுயர் கற்பகத்தின் * வல்லியோ?
கொழுந்தோ? அறியேன் **
ஈட்டிய வெண்ணெய் உண்டான் * திரு மூக்கு
எனது ஆவி உள்ளே *
மாட்டிய வல் விளக்கின் *
சுடரய் நிற்கும் வாலியதே 2

வாலியதோர் கனி கொல்? *
வினையாட்டியேன் வல் வினை கொல்? *
கோலம் திரள் பவளக் *
கொழுந்துண்டம் கொலோ? அறியேன் **
நீல நெடு முகில் போல் * திரு மேனி
அம்மான் தொண்டை வாய் *
ஏலும் திசையுள் எல்லாம் * வந்து
தோன்றும் என் இன்னுயிர்க்கே 3

இன்னுயிர்க்கு ஏழையர் மேல் * வளையும்
இணை நீல விற்கொல்? *
மன்னிய சீர் மதனன் * கருப்புச்
சிலை கொல்? ** மதனன்
தன்னுயிர்த் தாதை * கண்ண பெருமான்
புருவம் அவையே *
என்னுயிர் மேலனவாய் *
அடுகின்றன என்று நின்றே 4

என்று நின்றே திகழும் * செய்ய ஈன்
சுடர் வெண் மின்னுக் கொல்? *
அன்றி என்னாவி அடும் *
அணி முத்தங்கொலோ? அறியேன் **
குன்றம் எடுத்த பிரான் *
முறுவல் எனதாவி அடும் *
ஒன்றும் அறிகின்றிலேன் * அன்னைமீர்!
எனக்கு உய்விடமே 5

உய்விடம் ஏழையர்க்கும் *
அசுரர்க்கும் அரக்கர்கட்கும் *
எவ்விடம்? என்று இலங்கி * மகரம்
தழைக்கும் தளிர்கொல்? **
பை விடப் பாம்பணையான் *
திருக் குண்டலக் காதுகளே **
கைவிடல் ஒன்றும் இன்றி *
அடுகின்றன காண்மின்களே 6

காண்மின்கள் அன்னையர்காள்! என்று *
காட்டும் வகை அறியேன் *
நாள் மன்னு வெண்திங்கள் கொல்? *
நயந்தார்கட்கு நச்சிலை கொல்? **
சேண் மன்னு நால் தடந்தோள் *
பெருமான் தன் திரு நுதலே *
கோள் மன்னி ஆவி அடும் * கொடியேன்
உயிர் கோள் இழைத்தே 7

கோள் இழைத் தாமரையும் *
கொடியும் பவளமும் வில்லும் *
கோள் இழைத் தண் முத்தமும் *
தளிரும் குளிர் வான் பிறையும் **
கோள் இழையா உடைய * கொழுஞ்சோதி
வட்டங்கொல்? * கண்ணன்
கோள் இழை வாண்முகமாய்க் * கொடியேன்
உயிர் கொள்கின்றதே 8

கொள்கின்ற கோள் இருளைச் *
சுகிர்ந்திட்ட கொழுஞ்சுருளின் *
உள் கொண்ட நீல நன்னூல் தழை
கொல்? * அன்று மாயன் குழல் **
விள்கின்ற பூந்தண் துழாய் * விரை
நாற வந்து என் உயிரை *
கள்கின்ற ஆறு அறியீர் * அன்னைமீர்!
கழறா நிற்றிரே 9

நிற்றி முற்றத்துள் என்று * நெரித்த
கையராய் * என்னை நீர்
சுற்றியும் சூழ்ந்தும் வைதிர் * சுடர்ச்
சோதி மணி நிறமாய் **
முற்ற இம்மூவுலகும் *
விரிகின்ற சுடர் முடிக்கே *
ஒற்றுமைக் கொண்டது உள்ளம் * அன்னைமீர்!
நசை என் நுங்கட்கே? 10

** கட்கரிய பிரமன் சிவன் *
இந்திரன் என்று இவர்க்கும் *
கட்கரிய கண்ணனைக் *
குருகூர்ச் சடகோபன் சொன்ன **
உட்குடை ஆயிரத்துள் * இவையும்
ஒரு பத்தும் வல்லார் *
உட்குடை வானவரோடு *
உடனாய் என்றும் மாயாரே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---